**வடமாகாணக்கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | இந்து நாகரிகம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

### பகுதி I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 1 | 31) 4 | 41) 2 |
| 2) 1 | 12) 4 | 22) 5 | 32) 1 | 42) 5 |
| 3) 4 | 13) 1 | 23) 3 | 33) 5 | 43) 1 |
| 4) 5 | 14) 1 | 24) 4 | 34) 3 | 44) 3 |
| 5) 2 | 15) 5 | 25) 3 | 35) 1 | 45) 4 |
| 6) 5 | 16) 3 | 26) 1 | 36) 4 | 46) 5 |
| 7) 1 | 17) 2 | 27) 5 | 37) 1 | 47) 2 |
| 8) 4 | 18) 4 | 28) 2 | 38) 3 | 48) 4 |
| 9) 5 | 19) 1 | 29) 3 | 39) 2 | 49) 3 |
| 10) 3 | 20) 3 | 30) 3 | 40) 5 | 50) 1 |

(50 X 2 =100 புள்ளிகள்)

### பகுதி II

1) அ) இந்திரன்

- இடைவெளிக்குரிய தெய்வம்.
- இடிமுழக்கம், மின்னல் என்பவற்றோடு தொடர்புடைய தெய்வம்.
- இருக்குவேதப் பாடல்களில் 250 இவ் தெய்வம் பற்றி கூறுகின்றது.
- வரட்சி, இருள் இவனின் பகைவர்கள்.
- குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் அம்பு, வில், ஈட்டி போன்ற ஆயுதங்களை தாங்கி வருவான்.
- போரில் வெற்றியும் செல்வத்தையும் தருபவன்.
- சோமபானம் அருந்துவதில் நிகரற்றவன்.
- பாவச் செயல்களால் கோபப்படுபவன்.
- ஒளியை பரப்பி சிறை வைக்கப்பட்ட நீரை விடுவித்த பெருமை பெற்றவன்.

(05 புள்ளிகள்)

ஆ) சமயநெறி

- வேத இலக்கியங்கள் கடவுள் நம்பிக்கையையும் கடவுள் உண்டு என்பதையும் வலியுறுத்துவன.
- சைவ, வைணவ, சாக்த, சௌரவ, காணபத்திய, கௌமார நெறிகளின் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தமை. வேத கால உருத்திரன் பிற்கால சிவனாக வழிபட்டமை சைவத்தின் வளர்ச்சியையும், வேதகால விஷ்ணு வைணவ வளர்ச்சிக்கும், வேதகால சூரியன் சௌரவ வளர்ச்சிக்கும் சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்கள் சாக்த வளர்ச்சிக்கும் வித்திட்டமை.
- இயற்கை சக்திகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் தேவர்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை.
- வழிபாட்டின் நோக்கம் சுகம், நன்மைகளைப் பெறுதல்.
- வேதபாராயணம், காயத்திரி மந்திர வழிபாடுகள்
- யாகவேள்ளி, சதருத்திரியம், இசை, மந்திர வழிபாடுகள்.
- பல தெய்வ வழிபாடுகள் பிற்கால ஒரு தெய்வக் கோட்பாட்டின் வளர்ச்சிகள்.

(05 புள்ளிகள்)

agaram.lk

இ) கடவுள் கோட்பாடு

- இயற்கை சார்ந்த தெய்வீக கோட்பாடு : கடவுட் கோட்பாடு வளர்ச்சி, விண்ணுலக, மண்ணுலக, இடையுலகத் தெய்வீக சிந்தனைகள் : கடவுள் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை வளர்ச்சி.
- பலநாமக் கடவுட் கோட்பாடு : பின் சத்தியமான உள்பொருள் ஒன்றே என்னும் நம்பிக்கைகள். "ஏகம் சத்விப்ரா பகுதா வதந்தி" என்னும் கோட்பாடு : பிரமம் பற்றிய சிந்தனைகள் இறைவனைக் கண்ணாற் காண முடியாத சிந்தனை.
- பிரசாபதி, விஸ்கர்மன், விஸ்வதேவ என்னும் கொள்கை பிற்காலப் பிரமம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படையானவை.
- கடவுளரின் மனித உருவேற்று வருணனைகள், அரசனைப் போல, வைத்தியரைப் போல, பெற்றோரைப் போல மக்களைப் பாதுகாக்கும் சக்திகளாக தெய்வங்களை வழிபடல்.
- வேதங்கள் குறிப்பிடும் கடவுட் கோட்பாட்டின் பிற்கால வளர்ச்சிகள் : யசுர் வேதம் - உருத்திர சிவ கடவுட் கோட்பாடு பெறும் முக்கியத்துவம். (5 புள்ளிகள்)

ஈ)
- வேத கால இலக்கியங்கள் அக்காலச் சமுதாயத்தின் பல்வேறு அம்சங்களை கூறுகின்றது.
- அரசியல், குடும்பவாழ்வு, பொருளாதாரம், உணவு, உடை, அணிகலன்கள், கல்வி, திருமணம், தொழில், பொழுது போக்கு, விளையாட்டுக்கள்.
- பிரம்மசரியம், கிருகஷ்தம், வானப்பிரஸ்தம், சந்தியாசம் போன்ற சிந்தனைகள்.
- குடும்பத் தலைவனின் முக்கிய கடமைகளில் ஒன்று வேள்விச் சடங்கை ஒழுங்காக மேற்கொள்ளுதல்.
- சமூகக் கட்டமைப்பு, சமுதாயத் தொடர்புகள் பற்றிய கருத்துக்கள். (புருஷ சூக்தத்தில் அதிகமுள்ளது)
- அதர்வ வேதத்தில் பிணி, பிணி நீக்கும் மருந்து, ஆரோக்கிய வாழ்வு இடம் பெறுவதுடன் உழவுத் தொழில் விருத்தி பசு பெருஞ் செல்வமாக போற்றப்பட்டதுடன் செல்வத்தை மதிப்பிடும் கருவியாகவும் விளங்கியமை.
- வேதகால மக்கள் குழுவாக வாழ்ந்தனர். குழுத் தலைவர் காலப்போக்கில் ராஜன் என்ற நிலைக்கு உயர்வடைதல் அரச ஆட்சியில் சபா, சமிதி நிறுவனங்கள், புரோகிதர்கள் ஒற்றர்கள், கிராமணி, சேனா நீ போன்ற விடயங்கள்.
- பிற்கால வருணக் கட்டமைப்பின் தொடக்க கருத்துக்கள் புருஷ சூக்த பாடலில் இடம்பெற்றமை.
- சமுதாய கருத்துக்களை ஆதாரங்களுடன் எதிர்பார்க்கப்படும். (5 புள்ளிகள்)

2) அ) விசிட்டாத்வைதம் என்பதன் பொருள் விளக்கம்.

- விஷேசண விஷேசியங்களை உள்ளடக்கியதால் விசிட்டாத்வைதம் என்று கூறப்படுகின்றது. பிரமத்தை விஷேசணமாகவும் (அங்கி) என்று குறிப்பிட்டு ஆன்மாவினையும் உலகினையும் பிரமத்திற்குரிய விஷேடணங்களாகவும் (அங்கம்) குறிப்பிடுகின்றார். இந்த விஷேடியம் விஷேடணம் ஆகிய இரண்டும் இணைந்த விசிட்டமே இராமானுஜர் காட்டும் பரம்பொருளாகும். இதனையே இவரது கொள்கை விசிட்டத்வைதம் என அழைக்கப்படுகின்றது.
- விசிட்டாத்வைதம் (விசிட்டம் + அத்வைதம்) அதாவது விசேடனங்களுக்கும் விசேடியத்திற்கும் இடையிலான நெருங்கிய தொடர்பே (விசிட்டம்) விசிட்டாத்வைதம் என இராமானுஜரால் குறிப்பிடப்படுகிறது. (5 புள்ளிகள்)

ஆ) பரம்பொருட் கொள்கை.

விசிட்டாத்வைத கோட்பாட்டின் படி மூன்று பொருட்களும் உண்மை என்பதாகும். இதற்குப் தத்துவத்திரயம் என்ற பெயர் வழங்கப்படுகின்றது. இறைவன் (ஈசுவரன்) ஆன்மா (சித்து) சடம் (அசித்து) என்ற மூன்றினுள் இறைவன் மட்டுமே சார்பற்ற உள்பொருள் மற்றைய இரண்டும் அவனைச் சார்ந்தே உள்ளன. இறைவனே உயிர்கள் அனைத்திற்கும் உலகுக்கும் அந்தர்யாமியாய் அதாவது உள்நின்று அவை அனைத்தையும் இயக்குகின்றான். இறைவன் உயிருக்கு உயிராய் நிற்கும் காரணத்தால் இறைவன் வேறு உயிர் வேறல்ல. இரண்டும் ஒன்றுதான் என்பது பெறப்படுகின்றது. இதுவே இராமானுஜர் பேசும் அத்வைதம். இவரது அத்வைதத்தில் உலகம் உண்டு உயிர்களும் உண்டு ஆனால் அவை பிரம்மத்திற்கு விசேஷணங்கள். பிரம்மம் அவ் விசேஷணங்களையுடைய விசேஷியம். இந்த இரண்டும் சேர்ந்த விசிஷ்டமே இரானுஜர் பேசும் பரம் பொருள். இதனாலேயே அவரது அத்வைத கொள்கைக்கு விசிஷ்டாத்வைதம் என்ற பெயர் வந்தது.

பிரமம் என்ற மூலப் பொருள் விஷ்ணு. ஸ்ரீமன் நாராயண மூர்த்தியே கடவுள் உலகத் தோற்றத்திற்குத் தலைவன். இறைவனின் பண்புகள் ஐஸ்வர்யம், பலம், வீரியம், தேஜஸ், ஞானம்.

இறைவன் பூரண அறிவுடையவன். சிருஷ்டி, திதி, சம்ஹாரம், ஆகிய தொழில்களை இயற்றுபவன்.

agaram.lk

விசிஷ்டாத்வைத விஷ்ணுவோடு ஒன்று படுத்திப் பேசுகின்ற இறைவனும் உபநிடதங்கள் கூறும் உண்மை, நன்மை, அழகு, ஆனந்தம் என்ற இயல்புகளோடு கூடிய பிரமமும் ஒன்றே. அவனே எல்லா உயிர்களுக்கும் ஆதாரம். உயிர்களின் இலட்சியமும் அவனே. எல்லா உயிர்களுக்கும் எல்லா ஆதாரம். உயிர்களின் இலட்சியமும் அவனே. இராமானுஜர் இதற்கு அடிப்படை மூலமாக பிருகதாரண்ய உபநிடதம் தரும் பகுதியை எடுத்தாள்கின்றார். இவ்வுலகின்கண் வாழ்பவனும் இதன் உள்ளுறைபவனும் உலகத்தாரால் உணரப்படுபவனும் இவ்வுலகையே உடலாகக் கொண்டவனும் இதன் உள்ளிருந்து உலகை இயக்கி வருபவனுமான அவனே ஆன்மாவின் உள்ளிருந்து ஆள்பவன் என்ற கருத்து பரம்பொருட் கொள்கைக்குரிய விளக்கமாக உள்ளது. *(5 புள்ளிகள்)*

இ) ஆன்மாவும் பரம்பொருளுக்கும் இடையில் உள்ள தொடர்பு.

விசிஷ்டாத்வைதத்தில் பிரம்மாகிய பரம்பொருளுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு சரீரி சரீரி சம்பந்தமாகும். உலகம் உயிர் சரீரம், பரம்பொருள் சரீரி. இவற்றுக்கிடையிலான தொடர்பை அப்பிரதக்சித்தி அப்பிரதக்சிக்தி மூலம் விளக்குகின்றார். ஒன்று நிலைபெற மற்றொன்று அவசியம். உயிர் உலகு நிலைபெற இறைவனாகிய பரம்பொருள் அவசியம். இறைவனின் தனித் தன்மைக்கு உலகு உயிர் என்பன அவசியம்.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு முழுப் பொருளுக்கும் அதன் பகுதிகளுக்கும் உள்ளது போன்றது என்பது இராமானுஜரது கருத்து. உதாரணமாக ஒரு மேசையை முழுப் பொருளாகவும் அதன் கால்களை அதன் பகுதிகளாகவும் கொள்ளலாம். ஆன்மாக்கள் பகுதி இறைவன் அப்பகுதிகளையுடைய முழுப் பொருள் ஆன்மாக்கள் உடல், இறைவன் அந்த உடலை, இயக்கும் உயிர். இவற்றால் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு விளக்கப்படுகின்றது.

ஆன்மாவுக்குரிய முக்கிய குணம் ஞானமுடைமை. இந்த ஞானத்தை இராமானுஜர் தர்ம பூதஞானம் என்ற சிறப்புப் பெயரால் குறிப்பிடுகின்றார். ஆன்மாவின் குணமாகிய இந்த ஞானத்தையும் ஒரு திரவியமாகவே அதாவது ஒரு பொருளாகவே இராமானுஜர் கருதுகின்றார். ஆனால் இறைவனது ஞானம் பூரணமானது. ஆன்மாக்களது ஞானம் குறைபாடுடையது. இராமானுஜர் ஆன்மாக்கள் பிறந்திறந்து அல்லலுறுவதற்கு அவற்றின் அறிவுக் குறையும். அதனால் ஏற்படும் கன்மங்களுமே காரணம் என்கின்றார். பிறவித் துன்பங்களில் இருந்து நீங்கி ஸ்ரீமன் நாராயணன் வீற்றிருக்கும் ஸ்ரீ வைகுண்டத்தை அடைவதே வீடுபேறாகும். இதற்குக் கர்மமார்க்கம், ஞானமார்க்கம், பக்திமார்க்கம் ஆகிய மூன்றும் ஆன்மாக்களுக்கு துணை செய்யும் என்பது இராமானுஜரது கொள்கை. இவற்றுடன் பிரபத்தியையும் இராமானுஜர் கூறுகின்றார். இறைவன் மீது பூரண நம்பிக்கை வைத்துத் தன்னை முற்றாக அவனிடம் ஒப்படைத்தலே பிரபத்தியாகும். மனிதனும் முயல வேண்டும். அதே சமயம் இறைவனும் அருளவேண்டும் என்ற பிரபத்தி நெறியை இராமானுஜர் சிறப்பித்துக் கூறுகின்றார். *(5 புள்ளிகள்)*

ஈ) முத்தி பற்றிய சிந்தனை.

- ஆன்மாக்கள் யாவும் துன்பத்திலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடையவது இலட்சியமாகக் கொண்டவை.
- பிறவித் துன்பங்களிலிருந்து விடுபட்டு ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் நாராயண மூர்த்தியுனுடைய பாதார விந்தங்களை சென்றடைவதே முத்தி எனக்குறிப்பிடுகின்றார்.
- இறைவனின் அருளைப் பெற்றுக் கொள்வதற்குரிய வழிகளாக கன்ம யோகம், பக்தி யோகம், ஞான யோகத்தினைக் குறிப்பிடுகின்றார்.
- பக்தி மார்க்கத்திலும் பிரபத்தி மார்க்கமே சிறப்பானது. என்பதையும் வலியுறுத்துகின்றார் இதனையே சரணாகதி என்ற தத்துவத்தின் மூலம் விளக்குகின்றார்.

*(5 புள்ளிகள்)*

3) அ) வரலாற்று மூலங்கள்

- இலங்கையின் இந்து சமய வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள பல புதைப்பொருட் சின்னங்கள் உதவுகின்றன.
- தமிழ்மொழி, பாளி மொழி, சிங்கள மொழி, சமஸ்கிருத மொழி என்பவற்றில் தோன்றிய இலக்கியங்கள், பிற நாட்டார் குறிப்புக்கள் முதலானவை இலக்கியச் சான்றுகளாக அமைவன.
  - சமஸ்கிருத மொழி நூல்களுள் இதிகாசங்கள், புராணங்கள் முக்கியமானவை.
  - தமிழ்மொழி இலக்கியங்களை தமிழகத்தைச் சேர்ந்த இலக்கியங்கள், இலங்கையில் தோன்றிய இலக்கியங்கள் என இனங்காணலாம்.
  - பாளி மொழி இலக்கியங்களாக மகாவம்சம், சூளவம்சம் முதலானவற்றைக் கூறலாம்.


agaram.lk

- புதைபொருட் சின்னங்களாக ஒவ்வொரு வரலாற்றுக் காலகட்டங்களிலும் அமைக்கப்பட்ட கோயில்கள், சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலானவை உள்ளன.
- பௌத்த சமய மரபுகளுடன் இணைந்த வகையில் இந்து சமயம் சார் புதைபொருட் சின்னங்கள் காணப்படுதல் சிறப்பம்சமாகும்.
- இந்து சமயம் தொடர்பான ஆரம்பகால ஆய்வுகளில் அதிகமானவை இலக்கிச் சான்றுகளாக முதன்மைப்படுத்தியவை ஆகும்.
- அண்மைக் காலத்தில் இருவேறுபட்ட வரலாற்று மூலங்களை அடிப்படையாகக் கொண்ட வகையில் ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (5 புள்ளிகள்)

ஆ) பௌத்த சமய மரபுகளும் இந்து சமயமும்.

- இலங்கையின் இராஜதானிகளில் வெவ்வேறு மன்னர்கள் ஆட்சி செய்தாலும் அவர்களின் ஆட்சிக் காலங்களில் இந்து சமய மரபுகளும் வளம் பெற்றன.
- யாழ்ப்பாணத்தில் சிங்கை ஆரியன், பரராசசேகரன், செகராசசேகரன், சங்கிலி குமாரன், விஜய காலிங்கன் முதலான அரசர்களதும் ஏனை பகுதிகளில் 14 ஆம் பராக்கிமபாகு, 6 ஆம் பராக்கிரமபாகு, 9ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7ஆம் விஜயபாகு, ராஜசிங்கன் போன்ற அரசர்களதும் ஆட்சி இடம் பெற்றது. அக்காலங்களிலும் இந்து சமயத்தின் வளர்ச்சியைக் காணலாம்.
- சிங்கள மன்னர்கள் பௌத்த சமயத்தைப் பின்பற்றினாலும் இந்து சமயத்திலும் நம்பிக்கை உடையவர்களாக விளங்கினர்.
- இலங்கையில் கோட்டை இராஜதானியாக விளங்கிய காலத்தில் நாட்டின் தென்பகுதியில் இந்து ஆலயங்களும் அவை சார்ந்த நம்பிக்கைகளும் நன்கு வளர்ச்சி பெற்றன.
- 1ஆம் பராக்கிரமபாகு, 4ஆம் பராக்கிரமபாகு, 6ஆம் பராக்கிரமபாகு, 9ஆம் பராக்கிரமபாகு, மாயாதுன்னை, 7ஆம் விஜயபாகு போன்றவர்கள் இந்து சமயத்திற்கு அளித்த ஆதரவு, வழங்கிய நன்கொடைகள் என்பன பற்றி அறிய முடிகிறது.
- 6ஆம் பராக்கிரமபாகு சிவன் கோயில்களும், முருகன் ஆலயங்களுக்கும் தானங்களை வழங்கினான்.
- தேநுவரை விஷ்ணு ஆலயம் பற்றிய செய்திகளை 2ஆம் பராக்கிரமபாகுவின் கல்வெட்டு, குவெறோஸ் முதலான வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புக்கள் போன்றவற்றில் காணலாம்.
- பூசை விடு தூது, அன்னம் விடு தூது போன்ற இலக்கியங்கள் கோட்டையில் அமைந்திருந்த முருகன் கோயில் தொடர்பான தகவல்களைத் தருகின்றன.
- சிங்கள மொழிக் கல்வெட்டு ஒன்று தெய்வேந்திர முனையில் நகரீசர், நாகர், கணேசர் முதலான தெய்வங்களுக்கு அமைந்திருந்த கோயில்கள் பற்றிக் கூறுகின்றன.
- முன்னேஸ்வரத்திற்கு 6 ஆம் பராக்கிரமபாகு, 9 ஆம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் செய்த பணிகள் பற்றி சிங்கள, தமிழ் மொழிகளில் அமைந்த கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. (5 புள்ளிகள்)

இ) மன்னர்களும் இந்து சமயத் தொடர்பும்.

- இலங்கை மன்னர்கள் பௌத்த சமயத்தை தழுவிய போதிலும் இந்து சமய வளர்ச்சிக்கு தமது ஆதரவை வழங்கினர்.
- 2ஆம் மகிந்தன், 2ஆம் சேனன், எல்லாளன், துட்டகைமுனு போன்ற மன்னர்களின் காலத்தில் இந்து சமய நம்பிக்கைகள் நன்நிலையில் இருந்ததாக அறிய முடிகிறது.
- மன்னர்கள் தமது பெயரில் சிவ என்னும் அடைமொழிகளையும் பயன்படுத்தினர். (உ-ம்) கிரிகந்த சிவ, மகாசிவ, முடசிவ முதலானவை.
- சிங்கள மன்னர்கள் தமது அரண்மனைகளில் வைதீக சடங்குகளை ஆற்றுதல், இந்து ஆலயங்களை வழிபடுதல், புரோகிதர்களுக்கும் தானங்களை வழங்குதல் என்று இந்து சமயத்துடன் தமது தொடர்புகளைக் கொண்டிருந்தனர்.
- இலங்கை மன்னர்கள் வைதீக சடங்குகளால் தம்மைத் தூய்மைப்படுத்தியமை சீன யாத்திரிகனாகிய பாகியன் குறிப்பிடுகிறான்.
- மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் சிங்கள மன்னர்கள் இந்து ஆலயங்களைப் புனர்நிருமாணம் செய்தமை, கதிர்காமம் போன்ற ஆலயங்களை வழிபட்டமை போன்ற செய்திகளைத் தருகின்றன.
- இந்து சமயப் புரோகிதர்கள் அரண்மனைகளில் வேள்விகளை ஆற்றுதல், பூர்வ அபரக் கிரியைகளைச் செய்தல் போன்றவற்றைச் செய்தனர். (5 புள்ளிகள்)

ஈ) பொலநறுவைக் கால கோயில்களும் சிற்பவடிவங்களும்.

- பொலநறுவைக் கால இந்துக் கோயில்கள் கட்டிடக்கலை, சிற்பக்கலை, விக்கிரகக் கலை என்பவற்றின் வளர்ச்சியைக் காட்டுவன.
- தமிழக ஆலயங்களைப் போல் அல்லாமல் அளவில் சிறிதாக இருப்பினும் திராவிடக் கட்டிடக்கலை அம்சங்களைக் கொண்டுள்ளன.
- கோயில்கள் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம், முன் மண்டபம், பரிவாரக் கோயில்கள், விமானம் எனும் திராவிடக் கட்டடக் கலைக் கூறுகளைக் கொண்டுள்ளன. பொலநறுவைக் கோயில்களுள் 1 ஆம் சிவதேவாலயம் கலை ஆய்வாளர்களின் கவனத்தைக் கவருவன.
- இதன் கருவறை, அந்தராளம், அர்த்த மண்டபம் ஆகிய உறுப்புகள் தனித்தனியாக அமைக்கப்பட்டுப் பின்பே இணைக்கப்பட்டன.
- கருவறையின் அடித்தளம் முதல் சிகரம் வரையான பகுதி செம்மையான கற்பாளங்களால் அமைக்கப்பட்டுள்ளது.
- பொலநறுவைக் கோயில்களில் கல்லிலும், உலோகத்திலும் அமைந்த பல சிற்ப விக்கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1907, 1908, 1960 போன்ற ஆண்டுகளில் பொலநறுவையிலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் கடவுளர், நாயன்மார் படிமங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கடவுளர் படிமங்களுள் நடராஜர், சோமாஸ்கந்தர், பிரதோஷ மூர்த்தி என்பனவற்றையும், அடியவர் படிமங்களுள் - அப்பர், சம்பந்தர், சுந்தரர், காரைக்கால் அம்மையார் வடிவம் என்பனவற்றையும் கூறலாம்.
  - சோமாஸ்கந்த வெண்கலப் படிமத்தில் பீடத்தின் மேல் சிவன், உமை என்போர். காணப்படினும் முருகனின் வடிவம் தற்போது இல்லை.
  - திரிபங்க அமைதியிலும் உள்ள அப்பரின் படிமத்தின் இடுப்பும், கால்களும் சற்று வளைந்தவாறு காணப்படுகின்றன.
  - காரைக்கால் அம்மையார் வடிவம் சேக்கிழார் சித்தரிக்கும் பேய் உருவை வெளிப்படுத்துவதாக உள்ளது. (5 புள்ளிகள்)

4)
- சைவத்தின் முடிந்த முடிபைக் கூறுவது. வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள். புராணங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாஸ்திரங்கள் போன்றவற்றை பிரமான நூல்களாகக் கொண்டு பிரத்தியட்சம் அனுமானம், ஆப்த வாக்கியம் என்ற அளவைப் பிரமாணத்தின் அடிப்படையில் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களின் உண்மைகளையும் இயல்புகளையும் விளக்குகின்றது.
- பதியின் உண்மைத் தன்மையினை பின்வரும் அடிப்படையில் நிருபிக்கின்றது.
  1) உலகத்தின் உண்மைத் தோற்றத்தினைக் கொண்டு.
  2) படைப்பின் நோக்கத்தினைக் கொண்டு
  3) குறைபாடு உடைய பொருள்களைக் கொண்டு
- பானை உண்டெனில் அதனைப் படைத்தவனும் உளான். எனில் உலகம் உண்டு எனில் அதனைப் படைத்த இறைவனும் உண்டு. குடையினை உதாரணமாண கொண்டு தொழிற்பாட்டின் மூலம் நிரூபித்தல்.
- ஆன்மா செய்த வினைகளின் பயன்கள் அவ்வான்மாக்களைச் சென்று சேராது. அவ்வாறு வினைகளுக்கேற்ப அவற்றைச் சேர்க்க ஒருவன் வேண்டும் அவனே இறைவன்.
- குறைபாடு உடைய பொருள்களை இனம் கண்டு கொள்வதற்கு ஒரு நிறைவான பொருள் வேண்டும் அவ்வாறு நிறைவன பொருளே இறைவன்.
- பதியின் இலக்கண இயல்புகளாக சத், சித், ஆனந்தம் என்பதன் விளக்கம் (சத் - எங்கும் உள்ளது, சித் - சுகப்பிரகாசம், ஆனந்தம் - எண்குணங்கள்)
- பதியின் இருவகை நிலைகள்.
  1) சொரூப நிலை (சிறப்பியல்பு) விளக்குதல்.
  2) தடத்தி நிலை (பொதுவியல்பு) விளக்குதல்.
- தடத்த நிலையில் மூவகைத் திருமேனிகள் (அருவம், உருவம், அருவுருவம்) விளக்குதல்.
- நவபேதங்களின் ஊடாக ஐந்தொழில்.
  (படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்) விளக்குதல்.
- ஒன்றாய், உடனாய், வேறாய் என்ற நிலை ஐந்தொழில்களை ஆற்றுகின்றார்.
- பதியின் வியாபகத் தன்மையை திருவருட்பயன் பாடல்கள் மூலம் விளக்குதல்.

(20 புள்ளிகள்)

agaram.lk

5) • தமிழக வரலாற்றில் பல்லவர் காலம் பக்திநெறிக் காலம் பக்தி இயக்க காலம் என சிறப்பிக்கப்படுகின்றது.
- கி.பி 6ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 9ம் நூற்றாண்டுக்கும் இடையிலான காலம்.
- சைவசமய மறுமலர்ச்சியில் கட்டடக்கலையின் வளர்ச்சி முக்கியமானதாகும்.
- திராவிடக் கட்டடக்கலை தோன்றி வளர்ச்சியடைந்த காலமாகும்.
- பல்லவர் கால கட்டடக்கலை வளர்ச்சியை நான்கு கட்டங்களாக வகைப்படுத்தி நோக்கலாம்.
  1) மகேந்திர வர்மன் பாணி (குகைக்கோயில்)
  2) நரசிம்மன் பாணி (ஒற்றக்கல் கோயில்)
  3) இராஜ சிம்மன் பாணி (கற்றளிக் கோயில்)
  4) நந்தி வர்மன் பாணி (பிற்கால கற்றளிக் கோயில்கள்)

குகைக் கோயில்கள் :-

கி.பி 610 – 640 வரையான காலம். மலைகளைக் குடைந்து அமைப்பது. இதனை குடை வரை, குடபோகம், குடை தளிகள் எனவும் அழைப்பர். மண்டகப்பட்டு மாமண்டூர், வல்லம், பல்லாவரம், சீய மங்கலம், திருச்சிராப்பள்ளி போன்ற இடங்களில் காணலாம். கருவறை,

முகமண்டபம், தாழ்வாரம் பிரதான அம்சமாக காணப்படுகின்றது. மண்டப தூண்கள் 7 அடி உயரமும் 2 அடி அகலமும் கொண்டது. தூண்களை சிங்கங்கள் தாங்குவது போலவும், மேல் பகுதியில் தாமரை இதழ் வடிவிலும் அமைக்கப்பட்டிருக்கும். கருவறையின் இரு மருங்கிலும் இரு துவார பாலகர்கள் காட்சி தருகின்றார்கள், சுவர்களில் மிருகங்கள், பறவைகள், புடைப்பு சிற்பமாக காணப்படுகின்றது. கருவறையில் பட்டை தீட்டாத லிங்கங்கள் காணப்படுகின்றன.

ஒற்றைக்கல் கோயில்கள் :-

கி.பி 640 – 680 வரையான காலம். தனிப்பாறையை செதுக்கி அமைக்கப்படுவது. இதனை மலைதளிகள், ரதக்கோயில்ககள் என்றும் அழைப்பர். ஏகதள விமானம், தூங்கானை மாடவிமானம் காணப்படும். மாமல்லபுர மலைத் தளிகள் மகாபாரதப் கதாபாத்திங்களின் பெயர்களால் அழைக்கப்படுகின்றது. நாகர, திராவிடக் கலைப்பாணியில் அமைந்த தர்மராஜரதம் மூன்று தளங்களை கொண்டது. இந்து சமயச் சார்புடைய பல சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனை “சிற்பக் கலை களஞ்சியம்” என்று போற்றப்படுகின்றது.

இராஜசிம்மன் பாணி :-

கி.பி 690 – 800 வரையான காலம். சிறு சிறு கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கட்டுவதாகும். ஆகம சிற்ப பிரமாணத்தின் படி மூலஸ்தானம், அர்த்த மண்டபம், பலிபீடம், திருச்சுற்று மாளிகை போன்ற முழு கட்டடக்கலை அம்சங்கள் கொண்டு அமைந்ததாகும். மாமல்லபுரக் கடற்கரைக் கோயில், ஈஸ்வரன் கோயில், பனைமலைக் கோயில், காஞ்சிபுர வைகுந்தப் பெருமாள் கோயில் பற்றிய குறிப்புக்களும் விளக்கங்களும்.

நந்திவர்மன் பாணி :-

கி.பி 800 – 900 வரையான காலமாகும். கற்களை ஒன்றின் மேல் ஒன்று வைத்துக் கட்டுவதாகும். இங்கும் எல்லா வித கட்டட அம்சங்களும் காணப்படுகிறது. இவை அளவில் சிறியவை. காஞ்சி முத்தீஸ்வரர், மதங்கேஸ்வரர், வாடாமல்லீஸ்வரர் போன்றவை அரைவட்ட வடிவில் அமைந்துள்ளன. சகாதேவ ரதத்தை முன்மாதிரியாகக் கொண்டவை.

(20 புள்ளிகள்)

6) • சமயத்தின் பெயரால் இந்துக்களினுடைய சமூகத்தில் பின்பற்றப்பட்டு வந்த மூட நம்பிக்கைகளும் அர்த்தமற்ற கொள்கைகளும் இந்துப் பண்பாட்டைப் பாதிக்கச் செய்தமை.
- பழைமைக்கும் புதுமைக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தி சமய சமூக சீர்திருத்தம் செய்ய முற்பட்ட சீர்த்திருத்த இயக்கமாகுமே பிரம்ம சமாஜம் ஆகும்.
- பிரம சமாஜம் ராஜாராம் மோகன்ராயால் ஆரம்பிக்கப்பட்டது.
- இவர் பல சமய ஆய்வாளர். இந்தியாவின் புதுயுகத் தந்தை பகுத்தறிவு வாதத்தின் முன்னோடி. ஆன்மீக வளர்ச்சிக்கும் அறிவியல் சிந்தனைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.
- தமது மைத்துனி 1811ம் ஆண்டு உடன்கட்டை ஏறியதைக் கண்டு வேதனையடைந்த மோகன் ராஜ் சீர்திருத்த வாதியாக மாறினார்.
- உடன்கட்டை ஏறுதல், பலாதார மணம், பாலியல் விவாகம், சாதிப்பாகுபாடு, சிசுக் கொலை போன்றவற்றை நீக்க முற்பட்டமை.
- பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம், விதவைகள் மறுமணம் போன்வற்றுக்கு ஆதரவு வழங்கியமை.
- வேத உபநிடத கருத்துக்களை ஏற்றுக் கொண்டமை. அதனால் உருவ வழிபாட்டை எதிர்த்தமை.

- ஸ்மிருதிகள், வேதங்கள் போன்ற நூலைகளை ஆதாரமாகக் கொண்டு தனது கருத்துக்களை முன் வைத்தமை.
- மேலைத்தேயக் கல்வி மரபில் ஒளிபெற வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்தியமை.
- தியானம், சுலோகம், மந்திர வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை.
- *1815* இல் ஆத்மீக சபை அமைத்தமை.
- *1829* இல் உடன்கட்டை ஏறும் வழக்கத்தை தடைச்சட்டமாக கொண்டு வந்தமை.
- ஆங்கில கல்லூரி, சமஸ்கிருதக் கல்லூரி நிறுவியமை.
- சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்தியமை.
- *1833*இல் இறைவனடி சேர்ந்தமை. (*20* புள்ளிகள்)

7)
- மனித வாழ்வை மேம்படுத்துவதற்காக முன்வைக்கப்பட்டவற்றில் புருடார்த்தங்களும் ஒன்றாகும்.
- மனித ஆன்மீக இலட்சியத்தை அடைய கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குகளை அடிப்படையாக கொண்டதாகும்.
- புருடார்த்தங்கள் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்பவையாகும். அதனை வடமொழியில் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் என்பர்.
- அறத்தின் வழி நின்று அவ்வழியில் பொருளைத்தேடி அதனை அனுபவிக்கும் போது இன்பம் கிடைக்கும் இதன் வழி வீடுபேறு சித்திக்கும்.

அறம் :- அறம் என்பது தர்மம் ஆகும். இந்து ஒருவன் கடைப்பிடிக்க வேண்டிய மேலான ஒழுக்கம் கடமைகளை இது குறிக்கின்றது. ஸ்வதர்மம், குலதர்மம், இராஜ தர்மம், ஆச்சிரம தர்மம் முக்கியமானவை. அறம், வாழ்வின் நான்கு நிலைகளுடன் தொடர்பானது. அறம், நீதி, ஒழுக்கம், சமூக வாழ்வியலூடாக விளக்கப்படும் ஆத்மீக விடுதலையுடன் அறம் தொடர்பானது.

பொருள் :-பொருள் என்பது அர்த்தம் என்பதாகும் பொருள் இன்றி தனிமனிதனோ சமுதாயமோ வாழ்க்கை நடாத்த முடியாது. பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை என்ற கூற்று வாழ்க்கைக்கு பொருள் அவசியம் என்பதனை வெளிப்படுத்துகின்றது. பொருளை இராஜசேவை வாணிபம், விவசாயம் முதலிய தொழில்களால் பொருளீட்டலே சிறப்பானது. “தீவினை விட்டு ஈட்டல் பொருள்” என்பதற்கு அமைவாக பெற்ற பொருளை பகுத்துண்டு வாழவேண்டும்.

இன்பம் :- இன்பம் என்பது காமம் ஆகும். காதலர் இருவர் கருத்து ஒருமித்து ஆதரவு பட்டதே இன்பமாகும். தனித்தனியாக வாழ்ந்த தலைவனும் தலைவியும் இல்லறத்தில் தலைவன் தலைவிக்கும் தலைவி தலைவனுக்குமாய் வாழும் நிலை. பின்னர் பிள்ளைகளுக்காகவும் தொடர்ந்து உலக உயிர்கள் மீது அன்பு பரிணமிக்கும் நிலையாகும். இன்பமான சிற்றின்பம் அற வழியிலேயே அனுபவிக்கப்பட வேண்டும்.

வீடு :- இது மோட்சம் எனப்படும். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினையும் ஒழுங்கு முறையில் கடைப்பிடிக்கும் போது வீடு பேறு கிடைக்கும். “கண்டவர் விண்டிலர் விண்டிலர் கண்டிலர்” என்ற கருத்தின் விளக்கம்.
ஔவையார் புருடாந்தம் பற்றி கூறும் போது.

“ஈதல் அறம் தீவினை விட்டீட்டல் பொருள் எந்நாளும்
காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதரவு பட்டதே இன்பம் பரனை நினைந்து மூன்றும்
விட்டதே பேரின்பம்.”

- புருடாத்தங்கள் பற்றி விளக்கும் போது நூல்களிலும் இலக்கியங்களிலும் கூறப்பட்ட கருத்துக்களை முன்வைக்க வேண்டும். (திருக்குறள், ஆத்திசூடி, கொன்றை வேந்தன் அறநூல்கள்) (*20* புள்ளிகள்)

8)
- திருக்கோயில்கள் வளர்த்த நுண்கலைளில் இசைக்கலை முக்கியமானதாகும்.
- இசை இயைபுபடுத்தும் சாதனமாகும்.
- இறைவனே இசை வடிவினன் (நாதப் பிரமம்) என்பது இந்து மத நம்பிக்கை.
- இசை இன்பத்தை தருவது மட்டுமன்றி ஐம்புலன்களையும் கட்டுப்படுத்தி உள்ளத்தை பண்படுத்தி பேரின்பத்தை தரவல்லது.
- இந்துப் பண்பாட்டில் இசைக்கலை மிக உன்னதமான கலையாகும்.
- இசைக்கும் இறைவனுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் காணப்படுகின்றது. (உ+ம் சிவன் - உடுக்கு, சரஸ்வதி – வீணை, கண்ணன் - புல்லாங்குழல், சங்கு)
- வட இந்திய, தென் இந்திய வரலாற்றுக் காலங்களில் இசைக் கலையின் செல்வாக்குகளை விளக்குதல்.

agaram.lk

- இறைவழிபாட்டில் தோத்திரங்கள், கீர்த்தனங்கள், பஜனைகள், கீத வாத்தியங்கள் பற்றிய குறிப்புக்கள்.
- இசை வளர்ச்சியில் மும்மூர்த்திகளின் பங்களிப்பு.
- விபுலானந்தரின் யாழ் நூல் சிறந்த இசை நூலாகும்.
- கோயில் சிற்பங்களில் இசைக் கருவிகளின் முக்கியத்துவம்.
- பாடசாலைகள் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இசை ஒரு பாடமாகக் கறப்பிக்கின்றமை.
- இசைக்கருவிகள் ஆலய வழிபாட்டில் பயன்படுத்தப்பட்டமை. பஞ்சபுராணம் பாடும் மரபு தோன்றியமை.
- தற்காலத்தில் உலக ரீதியில் இசையின் செல்வாக்கும் முக்கியத்துவம் பற்றி குறிப்பிடல்.

(20 புள்ளிகள்)

agaram.lk